

# தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்



தொகுப்பாசிரியர்

ப.பிரதாப்



“
காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை
”

சுப்பிரமணிய பாரதியார்

ISBN 819379638-1
9788193796382

தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்
(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தொகுப்பாசிரியர்
ப. பிரதாப்

உரிமை
ஆசிரியருக்கே

முதற்பதிப்பு
அக்டோபர், 2019

வெளியீடு
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

வடிவமைப்பு, அச்சு
பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451

பக்கங்கள் : 18 + 398 = 416

விலை: ரூ. 450/-

ISBN : ISBN 819379638-1
9788193796382

# 43. இலக்கியங்களும் அரசியல் மதச்சூழல்களும்

முனைவர் **க.தனலட்சுமி**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, ந.க.ம கல்லூரி,
பொள்ளாச்சி.

இலக்கியங்கள் சமுதாயத்தைப் பிரதிபலிக்கக் கூடியவை. சமுதாய சூழல்களே இவற்றின் தோற்றத்திற்குக் காரணமாகி விடுகின்றன. மக்களின் ஒட்டுமொத்தக் கூட்டாக விளங்கக்கூடிய சமுதாயத்தின் ஒவ்வொரு செயல்பாடுகளும் மக்களை அறியாமலேயே அவர்களுக்குள் பதிந்து இலக்கியச் சிந்தனைகளாக மலர்ந்து விடுகின்றன. சமுதாயத்தின் நன்மைகள் படைப்புகளில் மலர்கின்றன. தீமைகள் இலக்கியப் புரட்சியாக உருவெடுக்கின்றன. இவற்றை ஆராய்வதாக இக்கட்டுரை விளங்குகின்றது.

## சங்க இலக்கியங்களும் வீரமும்

**“தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு”** என்ற நாமக்கல் கவிஞரின் வரிகளுக்கு ஏற்ப தமிழரின் தனி குணமாக வீரம் விளங்கியது. சங்க காலம் வீரத்தை அடிப்படையாகக் கொண்டது. வீரத்தின் அடிப்படையில் தான் காதல் இயங்குகின்றது. காளையை அடக்கிய வீரனையே தலைவி மணக்கிறாள். வினையே ஆடவர்க்கு உயிர் என்பதால் தான் மேற்கொண்ட வீரமிக்க போர்த்தொழில் முடிந்த பிறகு தலைவனுக்குத் தலைவியின் ஞாபகம் வருகின்றது. இப்படிப்பட்ட சூழலை அடிப்படையாகக் கொண்டே சங்க இலக்கியங்கள் உருவாயின. சங்க இலக்கியங்களை வீரயுகப் பாடல்கள் என்று கூறப்படுவதுண்டு. சாதாரண மனிதன் தன் நிலத்தன்மைக்கு ஏற்ப தன்னைக் காத்துக் கொள்வதற்கு வீரம் தேவைப்படுகின்றது. அந்த வாழ்வியல் சூழலே ஒருவனை வீரனாக்கி விடுகின்றது. விலங்குகளிடம் இருந்து தன்னைக் காக்கவும், கடல்கடந்தும், பாலைவனம் கடந்தும் பொருளீட்டச்

செல்வதற்கும் வீரமே அடிப்படையாகும்." வாழ்வியல் சூழல்களே வீரத்தை இலக்கியப் படைப்பாக்கின. மேலும் சேர, சோழ, பாண்டியர்கள் தங்கள் நாட்டைக் காக்கவும், தன்னாட்டு ஆட்சிக்குப் பிற மன்னர்களால் இடையூறு வருகின்ற பொழுது அவர்களோடு போரிடவும் வீரமே அடிப்படை. தன்னைக் காக்கவும் தன் நாட்டைக் காக்கவும் ஏற்பட்ட காலச் சூழல்களும் அரசியல் சூழல்களுமே வீரத்தை அடிப்படையாகக் கொண்ட சங்க இலக்கியங்கள் உருவாகக் காரணமாக அமைந்தன எனலாம்.

## நீதி நூல்களும் காலமும்

மன்னன் தெரியாமல் தவறு செய்கின்ற பொழுது செவி அறிவுறுத்துவதாகப் பாடப்பட்ட சங்க இலக்கியச் சூழல் நீதிகளை மட்டுமே எடுத்து சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சமணர்களின் ஆதிக்கம் யாக்கை நிலையாமையை வலியுறுத்தியதோடு நீதி போதனைகளையும் கூற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மன்னர்கள் நீதிபதியாக விளங்கிய காலம் சங்ககாலம். மன்னர்கள் மதங்களால் தடம்புரண்டபோது நீதி போதனைகள் புலவர் பெருமக்களால் கூறவேண்டிய அவசியமாயிற்று. மக்களின் மனநிலையில் ஒழுக்கமே பெரிதென கூறவேண்டிய காலச்சூழல் ஏற்பட்டது. ஒழுக்கம் உயிரை விட மேலானது என்றும் அன்பு கருணை ஆகியவற்றின் இயக்கம் ஒருவனை உயரச் செய்யும் என்று போதிக்க வேண்டிய வாழ்வியல் சூழல் ஏற்பட்டது. ஒரு ஆண் பல பெண்களை மணக்கும் ஒழுக்கக்கேடு பிறர் மனைவியை நேசிக்கும் கீழ்மட்டத்திற்கு வந்துவிடுமோ என்ற சூழல் வள்ளுவரை பிறர் மனைவியை நேசிக்காது இருப்பதற்கு **"பிறர்மனை நயவாமை"** என்று பத்து குறள் எழுத தூண்டியது. வாழ்வியல் சீர்கேடும் மதச் சுழல்களும் நீதி நூல்கள் தோன்றக் காரணமாயின என்பது ஆராய்ந்து பார்த்தால் புலப்படும்.

## காப்பியங்களும் கருத்துச் சுழலும்

நீதிநூற்காலம் முடிந்து காப்பியக் காலம் தொடங்குகின்ற பொழுது கற்பு வாழ்க்கைக்கும் கணியர் வாழ்க்கைக்குமான

போராட்டம் தொடர்கின்றது. கணிகையர்குல வாழ்க்கைச் சூழல் புறந்தள்ளப்பட்டு கற்பு வாழ்க்கையை முன்னிறுத்தும் உயர் வாழ்க்கை போற்றப்பட்டது. கணிகையர் விடுதலையும் பெண் வீரமும் ஒருசேர உயர்ந்த காலச் சூழல்களை காப்பியங்கள் வெளிப்படுத்துகின்றன. ஆணே கதைத்தலைவனாக இருந்தாலும் கற்புடைய பெண் அந்த ஆணைக் காட்டிலும் உயர்ந்தவள் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

கணிகையர் வாழ்வைப் புறந்தள்ளும் போக்கும் கற்புடைய பெண்ணே வீரத்துக்கும் அடிப்படையாவாள் என்ற கருத்தும் பெண்ணின் வீரமாக மூதின்முல்லையை முன்னிறுத்திய பாங்கும் பெண்களை உயரச் செய்தது. ஒழுக்கமுடைவளே மன்னனையும் எதிர்க்கும் ஆற்றல் பெறுவாள் என்ற நிலை உருவானது. மன்னன் நீதி தவறாதவனாக இருப்பான். இருப்பினும் தெரியாமல் நீதி தவறுகின்ற பொழுது பட்டும் படாமல் செவியில் அறிவுறுத்தும் பாங்கே சங்க இலக்கியத்தில் இருந்தது. ஆனால் மன்னனை நேருக்குநேர் எதிர்க்கும் சாதாரண குடிமக்களின் வாழ்வில் சூழல் காப்பிய காலத்தில் தான் உருவாகின்றது.

கற்பும் பிற ஒழுக்க மேன்மையும் உடைய பெண் முன் மன்னன் கூட அடி பணிவான் என்பதை காப்பிய காலச் சூழல் எடுத்துரைக்கின்றது. ஐம்பெருங்காப்பியங்கள் புத்தமும் சமணமும் மேலோங்கிய செய்தியைக் குறிப்பிடுகின்றன. ஆனால் ஐஞ்சிறு காப்பியங்கள் முழுமையும் சமண சமயத்தை முன்வைக்கின்றன.

ஒழுக்கத்தின் மேன்மை, சமயங்களின் தாக்கம் ஆகியவை ஐம்பெருங் காப்பியங்களும் ஐஞ்சிறுங்காப்பியங்களும் உருவாகக் காரணமாக அமைந்தன. நீதிதவறாமையை வலியுறுத்தும் சுழல்களே இவற்றுக்கு அடிப்படையாக அமைகின்றன.

### பக்தி இலக்கியங்களும் புரட்சியும்

பக்தி இலக்கியங்கள் பக்தியைப் போதித்ததோடு புரட்சியையும் ஏற்படுத்தின. சமணமும் புத்தமும் திருமணத்தை வெறுத்த பொழுது சைவமும் வைணமும் திருமணத்தை வலியுறுத்த ஆரம்பித்தன. ஆணாகப் பிறந்தால் மட்டுமே

கடவுளை அடைய முடியும் என்ற சமண சமய வலியுறுத்தல் களை புறந்தள்ளி சிவன் பகுதி, சக்தி பகுதி என்ற அர்த்தநாரீஸ்வரர் தோற்றம் உருவானது. அவரவர் மதங்களைப் போதிக்கும் போக்கும் அதில் குறைகள் நேர்கின்ற பொழுது ஆதரிப்பவன் மன்னனாக இருந்தாலும் நாமார்க்கும் குடியல்லோம் என்ற வீர ஆவேசமும் பக்தி இலக்கியங்களில் மேலோங்கின.

தமிழை முன்னிறுத்தும் திருஞானசம்பந்தரின் பக்தி நெறி தமிழ் ஞானசம்பந்தன் ஆக அவரை அறிமுகம் செய்தது. மன்னர்களை எதிர்க்கும் பக்தி நெறியாளர்கள் கொடுமைக்கு உள்ளாகினர். இருப்பினும் நிறைவில் உண்மையான பக்தியே வென்றது. மதங்களுக்கு இடையேயான கருத்து வேறுபாடும் காலச் சூழலும் உண்மையான மதம் எது, பக்தி எது என்பதை வலியுறுத்துவதற்கு காரணமாகின.

## சிற்றிலக்கியங்களும் மன்னர்களும்

மன்னர்களின் தமிழ்த் தாகத்தை தீர்க்கும் தடாகமாக சிற்றிலக்கியங்கள் விளங்கின. மன்னர்களின் வீரம் போற்றும் பரணியும் சங்க இலக்கியத்தின் கூறாகிய தூதும் தனித்தனி இலக்கிய வகைகளாக உருமாறின. சிற்றிலக்கியங்களுக்கு வீரமும் பக்தியும் பாடுபொருளாகின. சங்க இலக்கியம் வீரத்தையும் காதலையும் கூறின. நீதி இலக்கியங்களும் காப்பியங்களும் ஒழுக்கத்தையும் வீரத்தையும் இயம்பின. பக்தி இலக்கியங்கள் மத சூழலோடு கடவுளை இயம்பின. இவற்றின் கலவையாக சிற்றிலக்கியங்கள் விளங்கின. கூலப்பநாயக்கன் விறலி விடு தூது என்றும் மூவருலா என்றும் கலிங்கத்துப்பரணி என்றும் தனித்தனி கூறுகளின் விரிவாக்கங்களாக ஒட்டுமொத்த இலக்கியங்களின் விரிவாக்கமாக சிற்றிலக்கியங்கள் விளங்கின. முன்னோர் சொல்லை பொன்னே போல் போற்றும் மரபு போல் மன்னர் மரபையும் மக்கள் மரபையும் சிற்றிலக்கியங்கள் எடுத்தியம்பின.

## இக்கால இலக்கியங்கள்

ஆங்கிலேயர்களின் வருகையே இக்கால இலக்கியங் களுக்கு அடிப்படையாக விளங்கியது. ஆங்கிலேய இலக்கியப்

படைப்பை ஒட்டித் தமிழில் புதினங்களும் சிறுகதைகளும் தோற்றம் பெற்றன. ஆங்கிலேயர் வருகையும் காலனி ஆதிக்கமும் புரட்சிகரமான இலக்கியங்களைத் தோற்றுவித்தன. ஆங்கிலேயர் நம் மக்களை அடிமைப்படுத்தியதால் தான் பாரதி போன்ற வீரமிக்க கவிஞர்கள் உருவாகினர். ஆங்கிலேயர் வருகை இல்லை யென்றால் பாரதியின் புரட்சி மிக்க கவிதைகள் இல்லை என்றுதான் கூற வேண்டும்.

சமுதாயத்தில் நடக்கும் ஒற்றைக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு கற்பனா சக்திகளில் வீறுகொண்ட இலக்கிய மரபு, காலச்சூழலால் கற்பனையை இரண்டாம் பட்சமாக்கி கருத்துக்கு முதன்மை கொடுக்கும் இக்கால இலக்கியங்கள் தோற்றம் பெறுவதற்கு காரணமாயின.

சாதாரண மக்களின் வாழ்வியலும் மகத்தான இலக்கியங் களாக மலர்ந்தன. சங்க காலம் முதல் இன்று வரை உள்ள இலக்கியங்களை உற்றுநோக்கி ஆராய்கின்ற பொழுது அரசியல் சூழல்களும் மதச்சூழல்களுமே பெரும்பாலான இலக்கியங்கள் தோன்றக் காரணமாக அமைந்துள்ளன எனலாம். சமுதாயத்தின் சிறிய நிகழ்வும் இலக்கியமானது தற்காலச் சூழலில் தான் என்பதும் புலப்படும்.

காலமும் சுழலும்

இதயங்களை மட்டுமல்ல

இலக்கியங்களையும் படைக்க வல்லவை

படைப்போம்!

பண்படைவோம்!